செ.வெ.எண்: 14/ஜூலை நாள் : 07.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது

## தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழக அரசால் மாற்றுத்திறனரிகளின் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது. எனவே தகுதியுடையவர்கள் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்த தொண்டு நிறுவனம், சிறந்த மருத்துவர், அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம், சேவை புரிந்த சமூகப் பணியாளர் மற்றும் சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழக அரசின் விருதுகள் வழங்கப்படயிருப்பதால் தகுதியுடையவர்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று 11.07.2016-க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**